**O.S.No.49/2023**

**DW.3** திவ்யா

10-06-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

நான் எம்.காம், சி.ஏ. வரை படித்துள்ளேன். கோயமுத்தூரில் உள்ள டாக்டர் என்.ஜி.பி கல்லூரியில் படித்தேன். 29-04-1991 ல் பிறந்தேன். தற்பொழுது எனது தாயார் 1 ஆம் பிரதிவாதியின் வீட்டில் வசித்து வருகிறார். எனக்கு திருமணம் ஆகி விட்டது. எனது கணவர் சென்னையில் இருக்கிறார். நான் வேலைக்குச் செல்லவில்லை. என் கணவர் Photon ரியாக் டெவெலப்பர்ஸ் என்ற ஐ.டி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. 1 ஆம் பிரதிவாதியின் வக்கீல் அழைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன். பிரதிவாதியின் வக்கீல் அலுவலகத்தில் வைத்து தயாரித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் சுமார் ஒரு வருடமாக குடியிருக்கிறேன். கோயமுத்தூரில் உள்ள சுதா மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்று வருவதால் அந்த விலாசத்தில் தற்போது குடியிருந்து வருகிறேன். எனது முன்னிலையில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்படவில்லை. எனது சொந்த ஊர் வடக்கு சூரங்குடி, நாகர்கோவில் ஆகும். நான்முதல் விசாரணையில் கூறியுள்ள விலாசமானது முதல் பிரதிவாதியின் வீடாகும். நான் அங்கு தங்கியிருந்துதான் சிகிச்சை எடுத்து வருகிறேன். எனது நிரந்தர முகவரியைக் காட்டுவதற்கு நான் ஆவண ஆதாரங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை. எனது பெயரில் நாகர்கோவிலில் அசையாச் சொத்துக்கள் உள்ளது. இந்த வழக்கின் முதல் பிரதிவாதி எனது தாயாரின் உடன் பிறந்த சகோதரியாகும். முதல் பிரதிவாதிக்கும், தனபாலுக்கும் எங்கு வைத்து, எப்பொழுது திருமணம் ஆனது என்ற விவரம் எனக்குத் தெரியாது. அவர்களது திருமணம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. முதல் பிரதிவாதிக்கு நான் நெருங்கிய உறவினர் என்று சொன்னால் சரிதான். தனபாலுக்கும், எனது சித்திக்கும் குழந்தைகள் இல்லை. முதல் பிரதிவாதியின் சொத்துக்களுக்கு அவருக்கு பின் நான் வாரிசாக வர வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல. தனபாலுக்கும், எனக்கும் எந்த ரத்த சொந்தமும் இல்லை. முதல் பிரதிவாதியுடன் 2015 முதல்ர 2018 வரை உடன் இருந்தேன். முதல் பிரதிவாதிதான் தற்பொழுதும் எனக்கு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, எனது கணவர் எனக்கு செய்து வருகிறார். நான் கூறுவது தவறு என்றும்,. முதல் பிரதிவாதிதான் எனக்கு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார் என்றும், வழக்கிற்காக அவ்வாறு தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் வாதி விக்னேஷ் தனபாலின் ஒரே மகன் என்றால் சரிதான். தனபாலுக்கு விக்னேஷை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். தனபாலுக்கும், அவரது மகனுக்கும் சுமூகமான உறவு இருந்தது என்று சொன்னால், எனக்கு திருமணம் ஆகும்வரை தனபாலுக்கு மகன் இருந்த விவரம் எனக்கு தெரியாது. அதன் பின்னர்தான் நான் தெரிந்து கொண்டேன். வாதியைப் பற்றிய விவரங்கள் எனக்கு நன்றாகத் தெரியும் என்றும், ஆனால் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2018 க்கு பின் சென்னையில்தான் குடியிருந்து வருகிறேன். தற்பொழுது சிகிச்சை எடுத்துக் கொள்வதால் கோயமுத்தூரில் இருக்கிறேன். சிகிச்சை முடிந்த பின்பு

சென்னை சென்று விடுவேன். தனபால் ,இறப்பதற்கு இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பு கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தாரா என்று சொன்னால் சரியல்ல. தனபாலுக்கு 20 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல, அவர் நன்றாகத்தான் இருந்தார். அவருக்கு சர்க்கரை வியாதி இருந்தது என்று சொன்னால் சரிதான். அவர் எப்பொழுதிலிருந்து சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டார் என்று எனக்குத் தெரியாது. அவருக்கு சர்க்கரை வியாதி இருப்பது 2015 க்கு மேற்பட்டுத்தான் எனக்கு தெரியும். 2018 ல் தனபால் சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டு அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றி தெரியாது. ஆனால் காலில் அவருக்கு காயம்பட்டது. அதன் முழு விவரம் எனக்கு தெரியாது. சர்க்கரை வியாதியினால் தனபால் பாதிக்கப்பட்டு கால் விரல்கள் எடுக்கப்பட்டு அவர் நடமாட முடியாமல் இருந்தார் என்று சொன்னால், சர்க்கரை வியாதியினால் கால் விரல்கள் எடுக்கப்படவில்லை. ஆனால் காலில் அவருக்கு அடிப்பட்டு காயம் ஏற்பட்டது. அதனால் சுமார் ஐந்து மாதங்கள் அவர் ஓய்வில் இருந்தார். தனபால் கடைசி வரை மருந்துகள் உதவியுடன்தான் வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் நன்றாகத்தான் இருந்தார். நான் சாட்சி கையொப்பம் போட்டது உயில் ஆவணமாகும். உயில் ஸ்டாம்பு பேப்பரில் எழுதப்படவில்லை. கையெழுத்து போடும் இடத்தில் ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருந்தது. அந்த ஸ்டாம்பில் நோட்டரி கையொப்பம் செய்திருந்தார். நான் கையெழுத்து போட்ட ஆவணம் எப்பொழுது, யாரால், எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை தயாரிக்கவேண்டும் என்று யார், எப்பொழுது, யாரிடம் கூறினார்கள் என்று எனக்கு

தெரியாது. ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நபர்களின் அடையாள ஆவணங்கள் அதோடு இணைக்கப்பட்டதா

என்று சொன்னால் அவ்வாறு எதுவும் ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. பொதுவாக ஆவணத்தை ஏற்படுத்துபவரின் அடையாள ஆவணங்களைப் பற்றிய குறிப்புகள் சொல்லப்பட்டிருக்கும் என்று சொன்னால், எனக்கு அதை பற்றி தெரியாது. அந்த ஆவணத்தில் அதுபோன்ற அடையாள ஆவணங்களைப் பற்றிய விவரங்கள் காணப்பட்டதா, இல்லையா என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் கையொப்பம் செய்த ஆவணம் என்னமாதிரியான ஆவணம் என்று எனக்கு தெரியும். அந்த ஆவணத்தில் என்ன, என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு முழுமையாக தெரியாது, மறந்து விட்டேன். கொஞ்சம், கொஞ்சமாக நியாபகம் உள்ளது. அந்த ஆவணத்தில் வாதி விக்னேஷை பற்றிய விவரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. வாதி என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த ஆவணத்தில் அவர் பி.இ படித்துள்ளதாக போடப்பட்டுள்ளது. அவர் என்ன படித்துள்ளார் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. சரஸ்வதியிடம் வாதி என்ன படித்துள்ளார் என்று அவருக்கு தெரியுமா என்று நான் சரஸ்வதியிடம் கேட்டதில்லை. எனது அடையாளத்தைக் காட்டக்கூடிய ஆவணம் எதுவும் அந்த ஆவணத்துடன் இணைக்கப்படவில்லை என்று சொன்னால், எனக்கு எதுவும் தற்போது ஞாபகமில்லை, நான் ஆவணங்கள் எதுவும் கொடுக்கவுமில்லை. அந்த ஆவணத்தில் எனது விலாசமும், தனபாலின் விலாசமும் ஒரே விலாசமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கொரோனா காலத்தில் அவ்வப்போது சென்று வந்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் நான் ஆவணத்தில் குறிப்பிட்ட முகவரியில் இருக்கிறேன் என்று காட்டுவதற்கு நான் ஆவண ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

தனபாலுக்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் ஒரு சேமிப்பு கணக்கு இருந்தது என்று சொன்னால், சரிதான். அந்த கணக்கில் அவர் இறக்கும் பொழுது ரூ.16,95,695/- இருந்தது என்று சொன்னால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அந்த தொகையிலிருந்து ரூ.16,80,000/-த்தை தனபால் இறந்த பிறகு முதல் பிரதிவாதி எடுத்து விட்டார் என்று சொன்னால், எனக்கு அதை பற்றி தெரியாது. எனக்கு அந்த விவரங்கள் தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் தயார் செய்யும்பொழுது யார், யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்தச் சொத்துக்களுக்குரிய மூல ஆவணங்களை நான் பார்க்கவில்லை. 15-04-2021 தேதியில் ஆவணம் உருவாக்கப்பட்டஅன்று யார், யார் அங்கு இருந்தார்கள் என்றால், தனபால், சித்தி சரஸ்வதி ( 1 ஆம் பிரதிவாதி), பரிமளா, சுப்பிரமணிய அய்யா, நோட்டரி வக்கீல் ராமச்சந்திரன், மேலும் எனது தாயார் கிருஷ்ணவேணி ஆகியோர்கள் இருந்தார்கள். இந்த விவரங்களை எனது முதல் விசாரணையில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன விவரங்களை நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தை தயாரிப்பதற்கு தனபால் யாருடைய கருத்தைக் கேட்டு செயல்பட்டார் என்று எனக்கு தெரியாது. சுப்பிரமணியம் யார், எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. சித்தப்பாவை அவர் மருத்துவமனையில் வைத்து பார்க்க வரும்போது நான் அவரை பார்த்துள்ளேன். தனபால் இறந்தபோது ஈமச்சடங்குகளை வாதி விக்னேஷ் செய்தார் என்று சொன்னால் சரிதான். அப்பொழுது அவருடைய தாயார் ருக்மணியம்மாளும் உடன் இருந்தார். வாதிக்கு தனபால் அவர்கள் வேண்டிய உதவிகளை செய்து வந்தார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

பண்டிகை நாட்கள், விஷேச நாட்களில் தனபால் வாதிக்கு வேண்டியவைகளை செய்து வந்து கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றும், ஆனால்வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வாதியின் தந்தையாருக்கு உடல்நிலை நன்றாகத்தான் இருந்ததாக தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி எனக்கு சித்தி என்பதாலும் நான் அவருடனேயே தங்கியிருப்பதாலும் நானும், சித்தியும், மற்ற நபர்களும் பொய்யான ஒரு ஆவணத்தை தயாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தனபால் எந்த காலத்திலும் அந்த உயிலை தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் அவர் தயாரித்திருந்தால் உண்மையான விவரங்கள் அதில் அடங்கியிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் உரிமையை பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் சதி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை